**12.08.2025**
**MCOP.282/2023**
**<u>எ.ம.சா.1. 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

20.11.2015 அன்று TN 51 E 3915 என்ற Hero Honda இருசக்கர வாகனத்தை நான் தான் இயக்கி சென்றேன் என்றால் சரிதான். இந்த இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரர் தனபால் ஆவார். நான் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இயக்கியதாக திருத்துறைப்பூண்டி காவல் நிலைய குற்ற எண்.757/2015, ச.பி.279, 337, 304 (A) இதச பிரிவுகளின் படி என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மீது தான் குற்றப்பத்திரிக்கையும் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்தில் இறந்த ஜெயப்பிரகாஷ் தான் அவர் இயக்கி வந்த வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இயக்கி வந்ததாக நான் காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுக்கப்படவில்லை. விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் அது போன்று புகார் ஏதும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. என்னை குற்றவியல் நடவடிக்கையில் விடுதலை செய்யப்பட்டு விட்டது என்றும், அதனால் இந்த விபத்திற்கு நான் பொறுப்பல்ல என்று கூறுவது தவறு. குற்ற நடவடிக்கை தீர்ப்புரையில் விபத்து நடைபெறவில்லை என்று பரிசீலனை செய்து என்னை விடுதலை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கின் குற்ற நடவடிக்கையில் தீர்ப்புரையில் சாட்சிகளின் வாக்குமூலங்கள் காலம் மற்றும் நேரத்தை மாறி கூறியுள்ளதால் அதன் அடிப்படையில் விடுதலை செய்யப்படவில்லை. நான் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் TN 51 E 3915 என்ற வாகனத்திற்கும், 4ம் எதிர்மனுதாரருக்கு எந்த வித தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய முதல் விசாரணையில் 4ம் எதிர்மனுதாரர் தான் நஷ்டஈடு தொகை கொடுக்க

வேண்டும் என்று கூறியுள்ள சங்கதிகள் தவறு. அதனால் இந்த 4ம் எதிர்மனுதாரரிடம் காப்புறுதி செய்யப்பட்டுள்ள வாகனம் TN 50 P 6791 என்ற வாகனம் விபத்திற்கு காரணம் இல்லை என்பதால் 4ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு நான் ஓட்டிச் சென்ற TN 51 E 3915 என்ற வாகனம் தான் விபத்திற்கு காரணம் என்பதால் 1,2ம் எதிர்மனுதாரர்கள் தான் நஷ்ட ஈடு தொகை கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த மனு 3, 4 மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : - இல்லை.**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.